**Starting time 11.32 A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.20/2009**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.07.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனியப்பன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1-**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : தாவா சொத்தை நான் என் மகனுக்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டேன் என்றால், ஆமாம். தான பத்திரம் குறித்து நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால், ஆமாம். வழக்குரையில் பத்தி 5-ல் பாதைக்கு இருபுறத்திலும் இருக்கும் நபர்கள் பாதையை அகலப்படுத்த அவர்களுடைய நிலத்தில் இடம் கொடுத்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம். தாவா பாதைக்கு வடபுறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், 4-ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது. 4-ம் பிரதிவாதியின் நிலத்தின் புல எண் என்னவென்றால், 127/1. தாவா பாதைக்கு தென்புறத்தில் 1-ம் பிரதிவாதியின் நிலம் உள்ளது என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதியின் நிலத்தின் புல எண் என்னவென்றால், 127/B2. நான் கூறுவது தவறு என்றாலும், 1-ம் பிரதிவாதியின் நிலத்தின் புல எண் 127/2B என்றால், சரியல்ல. தாவா பாதையின் புல எண்தான் 127/2B1.

2. நீதிமன்ற ஆணையர் வழக்கு இடத்தை பார்வையிட்டபோது நான் உடன் இருந்தேனா என்றால், இருந்தேன். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம்

சரியானதா என்றால், சரியானதுதான். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பாதையின் அகலம் சுமார் 10 அடி என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். இன்றைய தேதி வரையிலும் அந்த பாதை அப்படியே தான் உள்ளது என்றால், ஆமாம். அந்த பாதையை ஒட்டி தென்புறத்தில் தென்னை மரங்கள் உள்ளது என்றால், ஆமாம். எத்தனை தென்னை மரங்கள் உள்ளது என்றால், 5 உள்ளது. நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் 10 வயதுடைய 5 தென்னை மரங்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், அது தவறு.

3. நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2-க்கு ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2-ல் புல எண் 127/2B1 மற்றும் 127/3A ஆகியவற்றில் பாதை அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதியின் நிலத்திற்கு தென்புறத்திலும் கிழக்கு நோக்கி செல்லும் ஒரு பாதை உள்ளது என்றால், ஆமாம். அந்த பாதையை நீதிமன்ற ஆணையரிடம் காட்டவில்லை என்றால், ஆமாம். என் தகப்பனார் எந்த வருடத்தில் தாவா சொத்தை வாங்கினார் என்றால், 1987-ல் வாங்கினார். ஆறுமுக பிள்ளை மற்றும் பச்சையா பிள்ளைதான் என் தகப்பனாருக்கு சொத்தை விற்றார்கள் என்றால், ஆமாம். பச்சையா பிள்ளை தன்னுடைய கிரயப் பத்திரத்தில் எவ்வளவு நிலத்தை கிரயம் வாங்கினாரோ அந்த சொத்தைதான் என் தகப்பனாருக்கு விற்றார் என்றால், ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் பச்சையா பிள்ளையின் கிரயம் ஆவணம் என்றால், ஆமாம். அது <u>பி.வா.சா.ஆ.1</u> ஆகும்.

4. நிலத்தின் உரிமையாளரான ஜெயராமன் என்பவரிடம் இருந்துதான் பச்சையா பிள்ளை கிரயம் வாங்கினார் என்றால், ஆமாம். பச்சையா பிள்ளையின் கிரயப் பத்திரத்தில் தாவா பாதை குறித்து குறிப்பிடவில்லை என்றால், அளவு போட்டு குறிப்பிடப்படவில்லை மாமூல் வழிநடை பாதை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுடைய கிரயப் பத்திரத்தில் பச்சையா பிள்ளை தாவா பாதை குறித்து

சொல்லியுள்ளார். பி.வா.சா.ஆ.1-ல் மாமூல் வழிநடை பாத்தியம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவர் எப்படி எழுதி வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ஆறுமுக பிள்ளைக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால், பச்சையா பிள்ளையின் மகன்தான் ஆறுமுக பிள்ளை. ஜெயராமனிடம் இருந்து பச்சையா பிள்ளை மீண்டும் வண்டித்தட பாத்தியம் என்று ஏதேனும் பத்திரம் எழுதி வாங்கியிருந்தாரா என்றால், இல்லை.

5. என் தகப்பனார் வாங்கிய கிரயப் பத்திரம்தான் வா.சா.ஆ.10 என்றால், ஆமாம். வா.சா.ஆ.10-ல் பச்சையா பிள்ளை கிரயப் பத்திரத்தில் கண்டுள்ள மாமூல் வழிநடை தட பாத்தியம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அதனுடன் சேர்ந்து மூலப்பத்திரத்தில் இல்லாத தாவா வண்டிப்பாதை குறித்து கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். பாதை எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால், 1984-ல். என் தகப்பனார் வா.சா.ஆ.10-ஐ 09.09.1987-ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால், ஆமாம். உண்மையிலேயே நான் கூறுவதுபோல தாவா பாதை உட்பிரிவு செய்யப்பட்டிருந்தால் அதன் புல எண்ணாக கூறப்படும் 127/2B1-ம் வா.சா.ஆ.10-ல் குறிப்பிட்டிருப்போம் என்றால், ஆமாம், குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.10-ல் எந்த புல எண்கள் வழியாக வண்டிப்பாதை செல்கிறது அதன் நீளம், அகலம் எவ்வளவு என்பதை பற்றி குறிப்பிடவில்லை என்றால், ஆமாம்.

6. வடிவேல் பிள்ளைக்கும், பச்சையா பிள்ளைக்கும் நிலத்தின் உரிமையாளரான ஜெயராமன் வண்டிப்பாதை உரிமை எழுதிக்கொடுக்கவில்லை என்றால், ஆமாம். 2008-ம் ஆண்டில் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தில் புல எண் 127/2B என்பதை புல எண்கள் 127/2B1 மற்றும் 127/2B2 என 1984-ல் உட்பிரிவு செய்யப்பட்டதாக ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளேன் என்றால், சரியல்ல. புல எண் 127/2B1 ஆனது முதல் பிரதிவாதியின் நிலத்தில் மட்டும்தான் அந்த உட்பிரிவு உள்ளது என்றால், ஆமாம். புல எண் 127/1-ன் நிலத்துக்காரர் பாதைக்கு இடம் விடவில்லையா என்றால், அவர்விட்டார், ஆனால்,

ஆவணம் இல்லை. 2009-ம் ஆண்டி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பாக ஒரு தட பாத்திய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் தாவா பாதையின் நீளம், அகலம் எவ்வளவு என்பது பற்றி குறிப்பிடவில்லை என்றால், ஆமாம். 2008-ம் ஆண்டில் 1984-லேயே தாவா பாதை உட்பிரிவு செய்யப்பட்டதாக ஆவணங்கள் ஏற்படுத்தி அதற்கு ஆதவராக வா.சா.ஆ.2-ஐ பொய்யாக தயாரித்து 10 நாட்களிலேயே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், தவறு.

7. புல எண் 127/2-ல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால், எனக்கு தெரியாது. புல எண் 127/2-ல் 2 ஏக்கர் 51 செண்ட் நிலம் உள்ளது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. தங்கவேல் ஜெயராமனிடம் இருந்து 23.09.1982-ல் கிரயம் பெற்ற போது மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 51 செண்ட் மற்றும் தடம் உட்பட என்றுதான் குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் தங்கவேல் கிரயம் பெற்ற சொத்திற்கான செக்குபந்தியில் சொத்திற்கு வடபுறத்தில் தடம் அமைந்துள்ளது என்றால், ஆமாம். புல எண் 127/1-ன் உரிமையாளரான ஆறுமுக கோனார் நிலத்திற்கு தெற்கு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், தடத்திற்கு தெற்கு என்று குறிப்பிடவில்லை என்றால், ஆமாம்.

8. ஜெயராமன் மீதம் உள்ள தன்னுடைய சொத்துக்களை அனுபவம் செய்வதற்காக தடத்தில் பாத்தியத்தை மட்டும் வைத்துக் கொண்டு தடத்தின் உரிமையை தங்கவேலுக்கு விற்றுவிட்டார் என்றால், தவறு. வா.சா.ஆ.2-ல் ஆராயியம்மாள், பச்சையா பிள்ளை, சக்திவேல், மணிவேல் ஆகியோருக்கு தடத்தில் உரிமையை எழுதிக் கொடுக்க அவர்களுக்கே உரிமை இல்லை என்றால், சரியல்ல. பச்சையா பிள்ளை அவருக்கு தடத்தில் இருந்த உரிமையைதான் எனக்கு எழுதிக் கொடுத்தார். பச்சையா பிள்ளையின் மூலப்பத்திரத்திலேயே அவருக்கு தட உரிமை இல்லை என்றாலும், நாங்களாவே ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுண்டு அவரிடம் இருந்து தட பாத்திய உரிமையை வாங்கியுள்ளோம் என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.1 கிரயம் பெற்ற பிறகு 22 ஆண்டுகள்

கழித்து வா.சா.ஆ.2 தட பாத்திய உரிமையை மட்டும் கிரயம் பெற்றுள்ளோம் என்றால், ஆமாம். நான் ஒப்படைத்துள்ள வருவாய்த்துறை ஆவணங்களில் கண்டுள்ளபடி 14 அடி அகலத்தில் வண்டிப்பாதை நிலத்தில் இல்லை என்றாலும், பொய்யான ஆவணங்களை தயாரித்து வண்டிப்பாதை உரிமை கோருகிறேன் என்றாலும், சரியல்ல.

9. தாவா வண்டிப்பாதையானது 1-ம் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும், எங்களுக்கு கிரயம் கொடுத்த பச்சையா பிள்ளைக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், தாவா பாதை பச்சையா பிள்ளை மற்றும் என்னுடைய சுவாதீனத்தில் என்றுமே இருந்ததில்லை என்றாலும், சரியல்ல. என்னுடைய நிலத்தை ஒட்டி கிழபுறத்தில் ஓடை உள்ளது என்றால், ஆமாம். அந்த ஓடை வரையிலும் தார் ரோடு உள்ளது என்றால், இல்லை. என்னுடைய நிலத்திற்கு அந்த தார் ரோட்டிலும், 1-ம் பிரதிவாதியின் நிலத்திற்கு தென்புறத்தில் உள்ள பாதையிலும் செல்வதற்குத்தான் எனக்கு உரிமையுள்ளது என்றாலும், 1-ம் பிரதிவாதியின் பட்டா நிலத்தில் அமைந்துள்ள பாதையை நான் உரிமை கோர இயலாது என்றால், சரியல்ல.

10. வா.சா.ஆ.4 முதல் 7 வரையான ஆவணங்கள் வருவாய்த்துறை அதிகாரிகளின் துணையுடன் என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால், சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும், போலியான ஆவணத்தையும், வருவாய்த்துறை ஆவணங்களையும் தயாரித்துக் கொண்டு உண்மையான உரிமையாளரான 1-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா பாதை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராததால் என்னுடைய தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் மறு விசாரணை :</u> நீ.ம.சா.ஆ.1-ல் 2, 3 பிரதிவாதிகளின் வீட்டிற்கு செல்லக்கூடிய பாதையானது 14 அகலம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்,

ஆமாம். வா.சா.ஆ.1-லேயே 9 அடி அகல தடப்பாத்தியம் உள்ளதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் கண்டுள்ள சொத்தைதான் 1-ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால், ஆமாம். வா.சா.ஆ.4 முதல் 7 வரையான ஆவணங்கள் எந்த திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது என்றால், பூமியில் உள்ள நிலத்தின் அளவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

Ending Time: 12.18 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.